காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 சித்திரை 1 (14-4-74) | இதழ்: 39

★

உள்ளே......

ஒரு விடிவெள்ளி
(அறிஞர் அண்ணா)

★

'ஆனந்த' ஆண்டு!
(கலையங்கம்)

★

மணாளனை மடக்கிய
மடக்கொடி
(கட்டுரை)

★

அவள் எழுதிய கடிதம்
(சிறுகதை)

★

கலைஞர் வாழி!

(பொன்மலை ச. கலியனூர்)

சந்தத் தமிழே தழைக்க நாட்டில்
தக்க உழைத்திட்டாய்—ஆணை
யொக்க தழைத்திட்டாய்!

ஐந்தாண் டோட்டி ஆற்றல் பூத்து
அரசை ஆண்டிட்டாய்—எங்கும்
முரசு பூண்டிட்டாய்!

அண்ணா கனவை ஆக்கம் செய்தே
அவனி காட்டிட்டாய்—தொண்டில்
பவனி ஊட்டிட்டாய்!

கண்ணாய்த் தமிழர் களங்கம் ஓட்டி
காத்து நின்றிட்டாய்—குணமே
பூத்து வென்றிட்டாய்!

நெஞ்சம் இனிக்க நிலைத்த அரசை
நிறைய ஊக்கிட்டாய்—தாழ்வுக்
கறையை நீக்கிட்டாய்!

தஞ்சம் கொண்டு தமிழர் நினைக்க
தகைமைச் செய்திட்டாய்—உணவில்
மிகைமை எய்திட்டாய்!

திங்கள் பிறையாய் தெங்கின் சுவையாய்த்
திளைக்க ஊட்டிட்டாய்—மகிழ்வு
நிலைக்கக் காட்டிட்டாய்!

தங்கத் தலைவா! சமூகக் கலைஞா!
தமிழே பொழியவே—நீவிர்
அமிழ்தாய் வாழியவே!

விலை: 0-25 காசு

தாய் மொழியால் முடியுமா? என்று கேட்டான்! முடியாதா! என்று கதறினான்!--முடிவு—அவன், இருளை விலக்கிய.........

ஒரு விடிவெள்ளி

பொங்கல் நாள், உள்ளத்திலே மகிழ்வும், புதுக் களிப்பும் கூத்தாடுகிறது; உழவர் மனைகளிலே அழகும் அவர்கள் உள்ளங்களிலே குதூகலமும் நிறைந்து கிடக்கும்!! இன்று நிறைந்து நிற்கும் இன்பம் என்றுமே எல்லோர் வாழ்விலும் நிறைந்து விட்டால்......?

முடியுமா?—இதயக் குமுறல்களிடையே இக்கேள்வி வெடிக்கிறது, வேதனைகளைத் தாங்கிக்கொண்டு!

கிராமங்கள், நாட்டின் செல்வம்—நமது வாழ்வின் களஞ்சியம், ஆனால் அவைகளின் நிலை, அங்குள்ள மக்களின் நிலைமை-வர்ணிக்க முடியாத சோகக் காட்சிகள்!

எண்ணெய் இல்லாத தலை, துணி போர்த்தாத உடல், மெலிந்து—நலிந்த உடம்பு—அதோ, ஏழையின் பிம்பமாக வரும் விவசாயி!

பக்கத்தில், கையில் கூடை, காலில் சேறு, களத்திலிருந்து திரும்பும் சோர்வுடன், கொளுத்தும் வெய்யிலை மறைக்கவும் துணியில்லாது ஒடிந்துவிழும் குச்சி போல் வரும் அவன் மனைவி.

சிறு குடிசை—ஒருபுறம் ஆடு மாடு. இன்னொரு புறம் சாணியும் புழுதியும் நிரம்பிய குப்பை, அதைக் கிளறிக்கொண்டிருக்கும் கோழிகள்—அவைகளுடன் பிறந்த மேனியராய் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைகள்!

அங்கு ஆரம்பமாகவேண்டும் இன்பம்—அன்றே புதுவாழ்வு பொங்கும் நாள்! அந்நாள் வர, ஏழை விவசாயின் பரம்பரை சொத்துக்களாயிருக்கும் பழைமையும் வைதீகமும் முறியடிக்கப்பட வேண்டும்!

அறிவு பாழாகும் வயல்களாயிருக்கும் மூட நம்பிக்கையும், 'முன்னோர்கள்' பக்தியும் விரட்டப்பட வேண்டும்!

விளையாடிக் கொண்டிருக்கின்றனவே, கோழிகளுடன், குப்பை மேட்டில்—கொளுத்தும் வெய்யிலையும் கருதாமல் அந்தக் குழந்தைகள்—இந் நாட்டின் எதிர்காலம் — வாழ்வில் அறிவு எழுப்பவேண்டும்! கல்வி மணம் பரவ வேண்டும்! வீட்டுக்கொரு விஞ்ஞானி எழும்பவேண்டும்!

முடியுமா?-மீண்டும், உள்ளத்தைப் பீறிக்கொண்டு வெடிக்கிறது இக்கேள்வி!

ஃ ஃ ஃ

முடியுமா?—இதே கேள்விதான் அவனது உள்ளத்திலும் எழும்பியது!

சுற்றுமுற்றும் பார்த்தான் — துயர மயமான மக்கள், தூசு படிந்த தெருக்கள், வேதனை விளையாடிக்கொண்டிருந்த வீதிகள், கஞ்சிக் கலயத்துடன் அலறி வரும் பெண்கள், துள்ளித் திரிய வழியில்லாது தோல் ஒட்டிக் கிடந்த குழந்தைகள்—அவன் கண்ணில் பட்டன!

ஒரு பெருமூச்சு, அவன் இதயத்திலிருந்து எழும்பியது—இது எனது நாடா? இதுவா எனது மக்கள் நிலை? என்று அலறினான், அழுதான்! எப்போது, திருந்தும் இச்சமுதாயம் என்று ஆத்திரம் தீரக் கத்தினான். அப்போதும் அவன் ஆவேசம் அடங்கியபாடில்லை.........

எதிரேயிருந்த வெள்ளைக் கடலை எட்டிய மட்டும் பார்த்தான், பார்த்துக்கொண்டேயிருந்தான்.

அவன் இதயத்திலிருந்து ஒரு எண்ணம் மின்னியது; பரந்து கிடக்கும் இந்த, நீர்ப் பரப்பைப்போல எனது நம்பிக்கையும் விரிந்தால்......?

ஏன், முடியாது — மீண்டும், அவன் இதயத்திலிருந்து, இக்கேள்வி சிறிது மகிழ்ச்சியுடன் கிளம்பியது. எழுந்து நின்றான், அவன் எண்ணங்கள் இறக்கைக் கட்டிக்கொண்டுப் பறந்தன.

என் நாட்டை விஞ்ஞானிகளின் சோலையாக்குவேன், என் பூமியை இன்பப் பிரதேசமாக்குவேன், எங்கும் அறிவு மணம் கமழச் செய்வேன்! என் தொண்டு என் சேவை இதற்குத்தான்! இங்கு நியூட்டன்களையும், பிளேட்டோக்களையும் சிருஷ்டித்து உலவ விடுவேன்! இதுவே என் இலட்சியம்! என் வாழ்க்கைப் பணி! என்று மீண்டும் ஒருமுறை, ஆவேசமுடன் கத்தினான்!

அப்போதும், அவன் உணர்ச்சி வேகம் தணியவில்லை! எதிரே, மோதி முழக்கமிட்டுக் கொண்டிருந்த கடலலைகளுடன் போட்டியிடுவது போல, கத்திக் கொண்டே இருந்தான்!

கடலலைகளைக் கண்டு, தன் கனவை, ஆத்திர மயமாக்கிக் கூச்சல் எழுப்பிக்கொண்டிருந்த அவனது ஆசை — முடியுமா என்று கேள்வி—முற்றுப்பெற கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் பிடித்தது.

அவன் எண்ணியதெல்லாம், தன்னாட்டில் நிலவும் பழைமையும், மூட நம்பிக்கையும் விலக்கப்பட வேண்டும், மக்கள் வாழ்வில் தன்னம்பிக்கை மலர வேண்டும், தொல்லையில்லாத வாழ்வு ஏற்பட வேண்டும் — அப்படிப்பட்ட சமுதாயம் அமைய வேண்டும் என்பதுதான்! அவனது, அந்த ஓயா ஆசை

[4-ஆம் பக்கம் பார்க்க]

காஞ்சி வார இதழ்
நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 14—4—74 | இதழ் 39

'ஆனந்த' ஆண்டு!

சித்திரை முதல்நாள். செகமெல்லாம் 'ஆனந்தம்' தொடங்கிடும் நன்னாள்; ஆம்! இந்நாள்.

மானிடர்க்கு ஆனந்தம் உண்டோ இல்லையோ, ஆண்டிற்கு ஆனந்தம் உண்டு இந்நாளில்!

'பிரமாதீசம்' விடை பெற்றது! 'ஆனந்தம்' வந்தது.

பிரமாதீச, ஆனந்த வரிசையில் வரும் அனைத்து ஆண்டுகளின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே தோன்றவில்லை.

இருப்பினும் 'தமிழ்ப்' புத்தாண்டு என்று கூறுவதில் தனி மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆம்! அப்படி மயங்குவதுதான் தமிழனின் 'தலை எழுத்து'ப் போலும்'

தாளில்—ஏட்டில் எழுதுவது நமக்குத் தெரிந்த பழக்கம்! 'தலையில் எழுதுவது' என்பது வந்தவர்கள் கட்டிவிட்ட வழக்கம்!

இங்ஙனம், தொன்றுதொட்டே வந்தவர்களுக்கு ஆட்பட்டு, சிந்தை தடுமாறும் தனிப் பழக்கம், நம்தமிழ்ப் பழக்கம் போலும்!

அப்பழக்கம் இன்றும் நம்மை விடவில்லைதான்! என் செய்வது?

இல்லையேல், ஒருமைப்பாட்டு ஓலத்திற்கிடையே 'மாநிலத்தவர்களுக்கே வேலை' என்கிற மண்ணின் மைந்தர் (Sons of the soil) கொள்கை, பல மாநிலங்களில் மிக வேகமாக வேரூன்றிப் பரவும்போது, நம்தமிழ் மாநிலத்தில் மட்டும் வேற்று மாநிலத்தவர்க்கு நடைபாதை விரிக்கும் இழிநிலை ஏற்பட்டிருக்குமா?

மராட்டியத்தில் 80 சதவிகித வேலை மராட்டியர்களுக்கே தரப்படவேண்டும் என்னும் அடிப்படையில் மராட்டிய அரசு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

"மாநிலத்தவர்களுக்கே வேலை" என்னும் இதே கொள்கை ஏனைய மாநிலங்களிலும் காட்டுத்தீ போல் பரவிவருகிறது.

இங்கிலையில், நாம் மட்டும், வந்தவர்களுக்கு இடமளிக்கும் 'சந்தை மடமாக' நம் தமிழ் மாநிலத்தை வைத்துக்கொண்டுதான் இருக்க வேண்டுமா?

தமிழ் இனத்தார் அனைவரும்; சிந்திக்க வேண்டிய காலகட்டம் நெருங்கி விட்டது.

நம் தாய்த்தமிழகத்தில் மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ள 'கல்பாக்கம் அணுமின் நிலையத்தில்' பணிபுரியும் வேற்றுமாநிலத்தவர்களின் எண்ணிக்கை நமக்குத் தெரியாதா? மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பிவிட்டால் போதுமா? சொந்த மாநிலத்தவர்கள் இரண்டாந்தரப் பணியாளர்களாகக் கருதப்படும் நிலைதானே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இருக்கிறது?

ஆண்டு, 'ஆனந்தமாக' வந்து பயனில்லை, தமிழன், தமிழனாக உணர்வு பெறத் தூண்டும் 'மகிழ்ச்சி' ஆண்டாக இது விளங்கவேண்டும். அங்ஙனம், விளங்கவைக்க வேண்டியது, தமிழ்ச் சமுதாயத்தின் கடமையாகும்!!

—மணிவேந்தன்

சிந்தனைச் சிற்பி சி. பி. சி.

தமிழகச் சட்டமன்றத்தின் மேலவைத் தலைவராக இருக்கும் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்களுக்கு இத்திங்கள் 11-ம் நாள் 68-வது வயது நிறைவுற்று 69-ம் வயதை தொடங்குகிறது. தலைவர் அவர்களது நெடுங்கால சீரிய பணியினை இந்நாளில் நினைவு கூர்ந்து, அவர்களது பிறந்த நாள் மகிழ்வில் 'காஞ்சி'யும் பங்கு பெறுகிறது. அவர் வளம் பல பெற்று நலம் பல எய்தி வாழ்க! வாழ்க! பல நூற்றாண்டு வாழ்க என வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்,
"காஞ்சி"

விடிவெள்ளி [2-ஆம் பக்கத் தொடர்ச்சி]

முற்றுப்பெற இருநூறு ஆண்டுகள் ஆயின! எண்ணற்ற நிகழ்ச்சிகள், இரத்தம் சிந்தப்பட்ட போராட்டங்கள், தொல்லைகள் ஆகியவைகளுக்குப் பின்னரே அவனது ஆசை தன் சமுதாயம் விஞ்ஞானபுரியாக வேண்டும் என்ற விருப்பம்—நனவாயிற்று!

ஃ ஃ ஃ

"யாரப்பா, நீ"

"நான்........."

"என்ன இழுக்கிறே, எந்த ஊர்?

ஏன், இங்கே வந்தே!......"

"படிக்க வந்தேனுங்க..."

"படிக்க வந்தாராமில்லே இவுரு படிக்க! இவருக்காகத்தானே காலேஜ் கட்டி வச்சிருக்கு போடா! ஊம்...போடான்னு போடா!"

ஆசையுடன் நுழைகிறான் ஒரு கல்லூரியில், யாராரோ படிக்கிறார்களே, புத்தகத்தைச் சுமந்து கொண்டு புன்சிரிப்புடன் செல்கிறார்களே, நாமும் ஏன் அங்கு செல்லக்கூடாது என்ற ஆசை துடிக்க!

ஆனால், அவனைக் கண்டதுமோ கல்லூரித்தலைவர் கண்டிக்கிறார். வராதே போடா என்று விரட்டுகிறார். இலாயக்கில்லாதவன், கல்லூரியில் சேர்வதற்கு தகுதியில்லாதவன், கல்வி பெறாதவன், காட்டுமிராண்டி என்பதல்ல அவனை அவர் விரட்டியடித்தமைக்குக் காரணம். அவன் ஒரு விவசாயியின் மகன்! எனவே, அவனுக்கு அங்கு இடமில்லை!!

இன்று இன்பபுரியாக இருக்கும் ரஷ்யாவிலே—ஒருபோது நடந்த சம்பவம் இது. விவசாயியின் மகன், கல்லூரிப் படிப்பைக் கருதுவது ஏளனம் என்று கருதப்பட்டது. எதற்கு அவர்களுக்கு இந்தப் படிப்பு! சீமான் வீட்டுக் குழந்தையா. உத்தியோகஸ்தரின் மகனா, இவனுண்டு இவன் கலப்பையுண்டு என்று கிடக்கவேண்டியதுதானே, ஏனிந்த பேராசை! என்று தூற்றப்பட்டது, யாராவது ஒரு விவசாயி தன் மகனும் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெறவேண்டும், படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று கருதினால் !

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ரஷ்யாவிலேயிருந்த நிலை இது. கல்வி நீரோடை, மாளிகைவாசிகளுடையதே தவிர, கல்லும் முள்ளும் வெட்டி கழனி திருத்திப் பாடுபடும் விவசாயி நெருங்க முடியாததாகயிருந்த நேரம்.

ஃ ஃ ஃ

லோமானுஸோவ்—ஒரு ஏழை விவசாயியின் மகன், உழைத்து உருக்குலையும் ஒருவனுக்குப் பிறந்த குழந்தை. எனவே, கல்வி மாளிகையை எப்படி எட்டிப் பிடிக்க முடியும்! இருந்தும், எழுத்துக்களைக் கூட்டி, எடுத்ததைப் படிக்கக் கற்றுக் கொண்டான்! மாதாகோவில் நூல்களைப் பார்ப்பது, அவைகளின் எழுத்துக்களைக் கூட்டுவது, படிப்பது என்று தனது முயற்சி மூலம் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டான்.

படிக்க வேண்டும் என்ற வேட்கை, அவனை அத்துடன் விட்டு விடவில்லை, போதுமென்ற :மனமே பொன் செய்யும் மருந்து என்று அந்த ஏழையின் இதயத்தில் எழும்பவில்லை! இன்னும் என்ன இருக்கிறது, எங்கே இருக்கிறது, எப்படி அவைகளைக் காண்பது, என்ற ஆவலும் ஆசையும் அவனை நெரிக்க ஆரம்பித்தன. கல்லூரிகளுக்குச் சென்று திரும்பும் தன்னொத்த இளைஞர்களைக் காண்பான்! ஏன், நான் இவர்களைப்போல அங்கு செல்லக்கூடாது என்ற எண்ணம் எழும்பும்! 'என்ன செய்துவிட்டேன். ஏன் நான் மட்டும் போகக்கூடாதாம்!' என்று சிந்திப்பான் – இதன் முடிவு அவனை, அங்கு செல்வது எப்படியாவது சேருவது என்று தூண்டியது. உள்ளூரிலுள்ள கல்லூரிக்குச் சென்றால் இவன் 'உண்மை' புரிந்துவிடுமே என்ற நினைவு கவனத்துக்கு வந்தது! சரி, இங்கில்லாவிட்டால் என்ன என்று கூறிக் கொண்டு தனது சொந்த ஊர்விட்டு புறப்பட்டான். நடந்தான் மாஸ்கோ நோக்கி! கால்நடையாகவே நடந்து மாஸ்கோ நகரடைந்த லொமானுஸோவ் மாஸ்கோவிலிருந்த கல்லூரியொன்றில் சேர்ந்தான் —விவசாயியின் மகனாக அல்ல — அந்த நிலையை மறைத்துக்கொண்டு சீமான் வீட்டுப் பையனாகத் தன்னை மாற்றிக்கொண்டு! நடித்துக்கொண்டு!!

ஃ ஃ ஃ

இவ்வளவு வேதனையுடன், கல்விகற்ற லொமானுஸோவின் உள்ளத்தில்தான் 'முடியுமா' என்ற கேள்வி பிறந்தது—தனது குடிசைகள் நிரம்பிய கிராமத்தையும் கோவணாண்டிகளாய்த் திரியும் விவசாயிகளையும் கண்டபொழுது!

இவர்கள் வாழ்வு வளமாகுமா, அதோ நான் குழந்தைப் பருவத்தில் கோழிகளுடன் விளையாடித் திரிந்ததைப்போல கவலையற்றுக் 'கத்தியும்,தத்தி'யும் ஓடும் ஏழ்மைக் குழந்தைகள் இன்ப வாழ்வு பெறுமா, என்னைப்போல படித்துப் பட்டம் பெற்று அறிவின் வாசலை அடையுமா, உலக வரலாற்றை உண்மையுரைகளை புழுதியும் புகைச்சலும் போட்டியிட்டுக் கிடக்கும் குடிசைவாசிகளின் குழந்தைகள் அறிய வாய்ப்புக் கிடைக்குமா, இது நடக்குமா, முடியுமா, என்று நினைத்தான், கதறினான். துடித்தது இதயம், வெடித்தது வேதனை. தான் கல்வி கற்கப்பட்ட கஷ்ட நஷ்டங்கள் ஓடி வந்தன-மின்னி மின்னி மறைந்தன! விவசாயியின் மகன் என்றதும் "போடா படிக்க இங்கு இடமில்லை" என்று விரட்டியடித்ததும், தான் மாறுவேஷம் பூண்டு கல்லூரி சென்று கலைகள் அறிந்ததுமான எண்ணங்கள் அவன் இதயத்தைப் பிளந்தன! நாட்டின் நிலையை எண்ணி நடுங்கினான்: இவ்வளவு மோசமான சமுதாயத்தை எப்படி தூய்மையாக்க முடியும் என்று நினைத்தான். வேதனையுடன் சோகமும் கவலையும் போட்டி போட ஆரம்பித்தது. கடல் அலைகளைக் கண்டு கதறித் தன் ஆத்திரத்தை அடக்க முயற்சித்தபொழுது விரிந்து பரந்து கிடந்த கடல் அவன் உள்ளத்திலே நம்பிக்கையூட்டியது. இவ்வளவு பெரிய சமுத்திரத்தையே, கப்பல் கடக்கும் பொழுது.........? கேள்வி மீண்டும் தலை தூக்கியது 'முடியுமா'—பதில் இடியென எதிரொலித்தது. 'ஏன். முடியாது?' பார்க்கிறேன். என்னால் முடிந்த மட்டும் பார்க்கிறேன், என் வாழ்வே ஒடிந்து நொறுங்கி சுக்கு நூறானாலும் விடமாட்டேன்! உழைப்பேன்!! ஊர், சீர்பெறப் பாடுபடுவேன்! என்று கர்ச்சனை எழுப்பினான்!

ஃ ஃ ஃ

"வைத்தியக் கல்லூரிக்குப் போகவேண்டுமா? சரி, சம்ஸ்கிருதம் படித்திருக்கிறாயா!"

"சட்டக்கல்லூரியில் சேர ஆசைப்படுகிறாய்! சேரு ஆனால் ஒன்று. உனக்கு சம்ஸ்கிருதம் தெரியுமா!"

இதுபோன்ற நிலை; இங்கு நமது மாகாணத்தில் ஏற்பட வேண்டுமென்று கூறப்படுகிறதல்லவா இப்போதும் ஒரு சாரார் ஆல், சம்ஸ்கிருத மொழிதான், வைத்திய சட்டப்படிப்புகளுக்கான வழிகாட்டி என்ற காரணங்களுடன்! இதேபோல ரஷ்யாவிலும் லத்தீன் கற்றவர் மட்டுமே விஞ்ஞானிக் கல்லூரி செல்ல முடியும் ஆராய்ச்சிப் படிப்புக்களைப் படிக்க அனுமதிக்கப்படுவர் என்ற நியதி இருந்தது!

சம்ஸ்கிருதம்—சட்ட வைத்திய படிப்பிற்கு முக்கியமானது என்று காரணமோ, விளக்கமோ எதுவும் கூறப்படாமல் இங்கு கூச்சல் போடப்படுவதுபோல, அன்று, அங்கு 'லத்தீன்' ஒருசாராரால் வலியுறுத்தப்பட்டது. அது கற்றவனே, கல்விமான், கரைகண்டவன், என்ற எண்ணம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தது சீமான்களாலும் பூமான்களாலும்! தாய்மொழி கற்கவே திண்டாடும் ஏழை விவசாயியும், இடுப்பொடியும் தொழிலாளியும் "லத்தீன்" எங்கே கற்கப் போகிறான்! அவனுக்கு நேரமோ அல்லது பணமோ தான் ஏது! எனவே பண வருவாய் தரும் 'படிப்புகளைத்' தங்கள் ஏகபோகச் சுரண்டல் வழியாக என்றும் நீடிக்கச் செய்யும் நினைப்புடன் 'ரஷ்ய ஆதிக்க வர்க்கம்' இந்த நிபந்தனை போட்டிருந்தது! லத்தீன் படித்தவன்தான் விஞ்ஞானி விஷயமறிந்தவன் என்று கருதப்பட்டான்; லத்தீன் படிக்க விரும்பி கல்லூரிகளுக்குச் சென்றாலோ சீமான் வீட்டு மகன் என்ற சின்னம் இருந்தாலொழிய அனுமதி கிடையாது! இந் நிலையில் ஏழை எப்படி கல்வி மாளிகையைக் காணமுடியும்!

விசித்திரமும் வேதனையும் விளையாடிய இந் நேரத்தில்தான் லொமனுஸாவ் தன்னை சீமான் மகன் என ஆக்கிக்கொண்டு கல்லூரி சேர்ந்து, கலைகள் பயின்றான். அவனது ஆசையும் ஆர்வமும் அவனை சிறந்ததொரு விஞ்ஞானியாக்கிற்று! கணிதம், தத்துவம், பௌதிகம், ரசாயனம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் பாண்டித்யமும் பலர் பாராட்டக்கூடிய பெருமதிப்பும் பெற்றான்!

பேரும் புகழும் பெற்ற லொமனுஸோவ்—அவைகளைத் தன் ஆட்டக்காயாக வைத்துக்கொண்டு நாகரிகத்தோல் போர்த்தி உலவுபவர்களைப் போல தன் சுயவாழ்வை வளமாக்கிக்கொள்ள நினைக்கவில்லை! மக்களை — தன் கிராமத்தாரை — கோழிகளுடன் கோழியாய் நிற்கும் குழந்தைகள் கூட்டத்தை மனத்திரையில் கண்டான், விம்மினான், கதறினான், முடியுமா என்று கேட்டான்! "முயல்வேன்" என்று முழக்கமிட்டான்!!

ஃ ஃ ஃ

அந்த முழக்கத்தின் விளைவுதான், ரஷ்யாவிலே விஞ்ஞானத்தின் வித்து தாய்மொழி என்ற பூமியிலே ஊன்றப்பட்டது. விஞ்ஞானத் தந்தை என்று மக்கள் அவனுக்கு மகுடம் சூட்டினர், மகிழ்ந்தனர். அவன் பெயரைச் சொல்லி! தனது தாய்மொழியிலே, ரஷ்ய மொழியிலே, விஞ்ஞான நூல்களை எழுதினான். லத்தீனே, விஞ்ஞானமொழி என்று விதண்டாவாதமும், வீண் பெருமையும் கொண்டு கிடந்த 'ஏதேச்சபுரி'யினரின் எண்ணத்தைத் தரை மட்டமாக்கினான்! மக்களுக்காகவல்லவா இவைகளிருக்கின்றன! மக்களறியமுடியாத மாபெரும் கலைகள் ஏன், இங்கு என்று கேட்டான். ரஷ்ய மொழியில் விஞ்ஞான நூல்களை மொழிபெயர்த்தான்—புதுப்பித்தான்! எனவேதான் யாரும் செய்யாததைச் செய்து, விஞ்ஞானம் வீட்டிலெல்லாம் பரவவேண்டும் என்ற விழைவுடன் தாய்மொழியில் நூல்களைச் செய்த, செய்கையால் மக்கள் அவனை விஞ்ஞானத் தந்தை என்றழைத்தனர்!

வீட்டுக்கொரு விஞ்ஞானிகள் வெளியாக வேண்டும். கிராமங்களிலிருந்து வரவேண்டும் சிந்தனைச் சிற்பிகள்—கிராமங்கள் கவனிப்பாரற்றக் களஞ்சியங்களாகயிருக்கின்றன. இந் நிலை மாறவேண்டும்—என்று அன்று அவன் எழுப்பிய ஆவேசக் குரல் காற்றுக் கூச்சலாகிவிடவில்லை.

நாடெங்கும் பள்ளிகளை நிறுவினான், பொது மக்கள் படிக்க, அறிவுபெற, அவர்களும் வாழும் வகையை அறிந்துகொள்ள!

லொமானுஸாவ் நாட்டின் கருவூலம்
நமது பல்கலைக் கழகம்
நற்கலை பரப்பிய நல்லோன்
சீரிய செயல்புரிந்த சிந்தனையாளன்.

என்று ரஷ்யக்கவிஞர் புஷ்கின், இவனைப்பற்றி புகழ்ந்து பாடியுள்ளார்! உண்மையில் ரஷ்யாவில் முதல் பல்கலைக்கழகத்தை நிறுவியது லொமனுஸொவ்தான்! ஏழையின் வயிற்றில் பிறந்து கிராமப் புழுதியில் விளையாடித்திரிந்துஇக்கட்டுகளிடையேகல்விபெற்று, பாசாங்குகளினூடே பட்டம் பெற்று விஞ்ஞானத் தந்தையென்ற விருதையும் 'பல்கலைக் கழகம்' என்ற பாராட்டுப் பெயரையும் கொண்ட லொமனுஸோவ் 1711-ல் ஆர்கேஞ்சல் மாகாணத்தைச் சேர்ந்த தெனிஸோவ்கா (இப்போது லொமனோஸொவா) என்ற கிராமத்தில் பிறந்தவன்.

தான் பிறந்த கிராமத்தையும், அங்கு விளையாடும் ஏழ்மையையும் கண்டு கதறி, அழுது, முடியாதா இங்கு அறிவு மணம் கமழச்செய்ய என்று முழக்கமிட்டு "சாதிப்பேன்"! என்று வெள்ளைக் கடலை நோக்கி சபதம் செய்த லொமனுஸோவ் விஞ்ஞானத்தின் பல துறைகளிலும், பல அரும்பெரும் ஆராய்ச்சிகளைச் செய்தான்; புதிது புதிதாக அவன் பல பேருண்மைகளைக் கண்டுபிடித்தான்! அவைகளை மக்களிடம் சொன்னான், புறுவெனப் பறந்து சென்று நாடெங்கும் பரப்பினான்! பௌதிகம், ரசாயனம், வானநிலை ஆகியவைகளில் மட்டுமல்ல இவன் அறிவும் செயலும் பரிமளித்தது—கடலலைகளைக் கண்டு இவைகளை மனிதன் கடக்கும்பொழுது, ஏன் நான் மக்கள்

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

மன்றத்தில் நிலவும் ஏழ்மை, பழமையென்ற கடலை, கடமையென்கிற கப்பல்கொண்டு கடக்கக் கூடாது என்று கேட்டானல்லவா, ஒருநாள்! அதைப்போலவே கடல் யாத்திரையிலும் இறங்கினுன் — ரஷ்யாவிலிருந்து ஆர்க்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்து அமெரிக்காவுக்குச் செல்ல வழிகண்ட பெருமையும் இவனுடையதுதான்.

ஃ ஃ ஃ

இருநூறு ஆண்டுகளுக்குமுன் அவன் கண்ட கனவு இன்று நனவாயிற்று! ரஷ்யா—இன்று விஞ்ஞானபுரியாக இருக்கிறது—உலக நாடுகளிலேயே பெருமிதமான ஆற்றலரசர்களையும் அரிய அறிஞர்களையும் கொண்டு விளங்குகிறது. இத்தகைய நெஞ்சம் பூரிக்கும் நிலை தனது மக்களுக்கு ஏற்பட வேண்டும் என்று அவன் பாடுபட்டான் — தனது வாழ்நாளை இந்த அரும் பணிக்குப் பாடுபட்டான்! தாய்மொழி என்ற மண்ணிலே விஞ்ஞானம் என்ற வித்தைப் புதைத்தான்! இன்று அது வளர்ந்து, ஆலமரமாகி நிற்கிறது — ஆச்சரியப்படத்தக்க அளவில்!

முடியுமா?—இந்நிலை, இங்கு ஏற்பட முடியுமா, மீண்டும் நம்மை இந்தக் கேள்விக்குறி அலைக்கழிக்கிறது! நம் நாடு 'ரஷ்யா' ஆக முடியுமா. குடிசையில் அறிவும், கலப்பை பிடிப்போர் கவிஞர்களாக, ஏர் முனையில் பார் புகழும் விஞ்ஞான முடிவுகள் வெளியாக, குப்பைமேடுகள் கலைபயில் கழகங்களாக முடியுமா?

முடியும்.

பழமையையும், மூடநம்பிக்கையும் தூள் தூளாக்கப்பட்டு, கல்வி வசதியும், அதைக் கற்பதற்குள்ள பண வசதியும் 'மாளிகை வாசி'களுக்கு என்ற நிலை மலரவேண்டும், அப்போது தகுதியும், திறமையும் உழவர் மனைகளிலிருந்து வெளிக் கிளம்பும், பெருமித முழக்கத்துடன்! அந்த நாள் வர, படித்துப் பட்டம் பெற்றவர்கள் — லொமனுஸோவ்களாக வேண்டும்! மக்கள் வாழ்வுக்குப் பணியாற்றக் கிளம்ப வேண்டும், வீட்டுக்கொரு விஞ்ஞானியைத் தருவேன் என்று வீர ஒலி எழுப்பவேண்டும்!

பழைமை படர்ந்திருந்த ரஷ்ய மண்ணுக்கு ஒரு விடிவெள்ளி — லொமனுஸாவ்! அதுபோன்ற விடிவெள்ளிகள் நமது நாட்டில்—ஏழைகள் குடிசைகளில்—உதயமாகவேண்டும் இருள் நீங்கி, புதுவாழ்வுமலர!

★

மணாளனை மடக்கிய மடக்கொடி

வெளியே உலாவச் சென்ற தலைவன், நீண்ட பொழுதாகியும், இல்லம் திரும்பவில்லை, தலைவி தன்னந்தனியே வீட்டில் காத்திருக்கிறாள். காதலன் வரவைக் காணாத அவள், வழிமேல் விழி வைத்துப் பார்த்தபடியே இருக்கிறாள். நாழி ஆக ஆக அவள் ஏங்குகிறாள். எங்கு சென்றிருப்பானோ, என்ன கேடு வந்துற்றதோ என்று பலவாறாக எண்ணி வருந்துகிறாள்.

சிறிது நேரங்கழித்து அவளுக்கு ஒரு சிந்தனை பிறக்கிறது. தலைவனோடு, அவனது நண்பனான பண்புகெட்ட பாணன் சென்றிருப்பதால், ஒருக்கால் அவன் தன் கணவனைப் பரத்தையர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றிருப்பானோ என்று எண்ணமிடுகிறாள். எப்படிச் சிந்தித்துப் பார்த்தாலும் வேறு நிலைமை எதுவும் அவள் உள்ளத்தில் படவில்லை; இந்தக் கருத்தே உறுதியாகப் படிந்துவிடுகிறது. ஏக்கமும், வருத்தமும் இப்பொழுது அவளுக்குத் துக்கமாகவும், சினமாகவும் மாறிவிடுகின்றன. காதலன் வரவை வெறுப்போடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்; ஆனால் வெறுப்பை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், அவனை வரவேற்று, உண்மையை அவனிடமிருந்தே அறிந்துகொள்ள வேண்டும் என்று தன்னைத்தானே உறுதிப்படுத்திக் கொள்கிறாள்.

தலைவன் விரைவாக வந்து வீடு ஏறி, உள்ளே நுழைகிறான். தலைவி எதிர்நடந்து செல்லுகிறாள். தலைவனைத் தடுத்து நிறுத்திக்கொள்ளுகிறாள். அவன்மீது கொண்டுள்ள சினத்தை அடக்கிக் கொள்ள வேண்டும் என்று அவள் நினைத்தாலும், அவனைக் கண்டதும் சினம் பொங்கி எழுகிறது. அவனையே உற்று கவனிக்கிறாள். அவனது வேட்டி, மடிப்பெல்லாம் கலைந்து, கசங்கி, நலங்கிக் காணப்படுகிறது; அவன் தோள்மீது கிடக்கும் பூமாலை, நிறங்குறைந்து, வாடி வதங்கித் தென்படுகிறது; அவன் மார்பில் பூசிய சந்தனம் வேர்வையால் நனைந்திருக்கிறது. தலைவி, தான் முதலில் ஊகித்துக் கொண்டது உண்மைதான் என்று உணர்ந்து கொள்கிறாள் அவனது அழகான மார்பை அன்போடும், ஆத்திரத்தோடும் பார்த்துக்கொண்டு அசைவற்று நின்றாள்.

"ஏன் என்னை உற்றுப் பார்க்கிறாய்?..."

"இல்லை, உன்னுடைய உயர்ந்த அழகான மார்பைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்!..."

"இதில் வியப்புக்கு என்ன இருக்கிறது?..."

"வியப்பதற்கு ஒன்றுமில்லை; ஆனால் வினவுதற்கு இருக்கிறது!"

"அப்படி என்ன இருக்கிறது?"

"ஒன்றுமில்லையா?..."

"என்ன இருக்கிறது?"

"மடி கலைந்த வேட்டி, நிறம் குலைந்த மாலை, வேர்வை நனைந்த சந்தனம் இவைகள் இருக்கின்றனவே, போதாதா?"

"இவைகள் இருந்தால்..."

"இவைகள் உனது தன்மை என்ன என்பதை விளங்குகின்றன. அதனால்தான் உன்னை வினவ வேண்டியிருக்கிறது!"

"என்ன வினவ வேண்டியிருக்கிறது?"

"என்னவா?...நீ எவ்விடத்துக்குச் சென்றிருந்தாய்; ஏன் இப்பொழுது இவ்விடத்திற்கு வந்திருக்கிறாய்?..."

தலைவி இப்படிக் கேட்பதைக் கேட்டதும், தலைவன், தன்னுடைய தன்மையை மறைத்துக் காட்டவேண்டி, விழுந்து விழுந்து சிரித்துக் காட்டுகிறான். புன்முறுவல் பூத்தவண்ணம் அவளுடைய நீலப்பூவை ஒத்த கண்களை உற்றுக் கவனிக்கிறான். பிறகு சிரித்துக்கொண்டே அவளிடம் கூறுகிறான், "அதைப்பற்றியா கேட்கிறாய்?... இப்பொழுதே அதனைக் கூறிவிடட்டுமா? நீ கேட்டுக்கொள்கிறாயா?

இலக்கியம்

கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

......நான் குதிரை சவாரி செய்துவிட்டு வருகிறேன்; அதனால்தான் இந்தக் கோலமெல்லாம்!"

"ஓ! நீ குதிரை சவாரியா, செய்துவிட்டு வருகிறாய்?...இப்பொழுது தெரிந்துகொண்டேன் நீ எந்தக் குதிரை சவாரி செய்துவிட்டு வருகிறாய் என்பதை!" என்று தலைமகள் கேலிக் குரலில் கூறுகிறாள்.

அதுகேட்ட தலைவன், "என்ன தெரிந்து கொண்டாய்?..." என்று சற்று அச்சத்தோடும் அதிசயத்தோடும் கேட்கிறான்.

"தெரிந்து கொண்டதைக் கூறுகிறேன், கேள்! நீ ஏறிய குதிரை, ஐந்துவகையாகப் பிரித்துப் பின்னப்பட்ட கூந்தலாகிய பிடரி மயிரினையுடையது; அது பலதடவை கத்தரித்து விடப்பட்ட மயிர் போலவே விளங்கும்; நீ ஏறிய குதிரை, மயிர் முடியின்மேல் விரித்துப் பொறுத்திவைத்த சிவப்புக் குஞ்சமாகிய சிவந்த தலையாட்டத்தினையுடையது; நீ ஏறிய குதிரை, நீல மணியைத் தோலிலே வைத்துத் தைத்துச் செய்த கழுத்தணியாகிய கழுத்திற் கட்டுதலையுடைய கட்டுவடத்தினையுடையது; நீ ஏறிய குதிரை, மெல்லிய காதிற் கிடக்கும் கன்னப்பூ என்னும் காதணியாகிய, கீழேதொங்கும் இயல்பையுடைய கன்ன சாமரையினை (காதுக் குஞ்சம்)யுடையது; நீ ஏறிய குதிரை; தெய்வவுத்தி என்னும் தலை நகையருகே துவக்கி ஒரு வடமாய்த் தொங்கும் சுட்டியாகிய, குதிரை கண்ணுற்கண்டு அஞ்சும்படியாக விட்டுவைத்த அழகான சாட்டையினையுடையது; நீ ஏறிய குதிரை, நூலால் செய்யப் பட்ட கழுத்தணியாகிய, திண்ணிய கடிவாளத்தை யுடையது; நீ ஏறிய குதிரை, சீரான மணிகளால் செய்த மூன்று சரங்களால் ஆன கழுத்தணியாகிய, பலப்பல நிறத்தையுடைய கண்டிகையினையுடையது; நீ ஏறிய குதிரை, பொன்னாற் செய்த மேகலையாகிய (ஒட்டியாணம்), கழுத்திலே கட்டின சதங்கை தண்டையினையுடையது; நீ ஏறிய குதிரை, காலிலே அழுகுற கட்டிய பொன்னாற் செய்த சதங்கையாகிய, காற் சதங்கையுடையது; நீ ஏறிய குதிரை, காலிலே போடப்பட்ட சிலம்பாகிய, கால் கெச்சையினையுடையது!" என்று தலைவி கேலியாகச் சொல்லிக் கொண்டே போகிறாள்.

தலைவி தன்னைக் கேலி செய்கிறாள் என்பதை அறிந்துகொண்ட தலைவன், குற்றம் தன்னிடத்து இருக்கும் காரணத்தால் ஏதும் சொல்லமுடியாதவனாய், "என்ன உளறிக் கொண்டே போகிறாய்?..." என்று சற்றுக் கடுகடுத்துக் கேட்கிறான்,

"உளறவில்லை! உண்மையைத்தான் உரைத்திடுகிறேன். நீ காதலித்து ஏறிய குதிரையை, வெட்டவெளியில் செலுத்தமுடியாது என்று கருதி, நறுமணம் கமழும் மாளிகையின் அழகான நிலா முற்றத்திலே, அதன் காலிற்கட்டின சிலம்பும் கெச்சையும் ஆரவாரிப்ப, குறுக்கு நெடுக்காகச் செலுத்தினாய்ப் போலும்! அதனால்தான் இவ்வளவு இளைத்திருக்கிறாய்! நீ இனிமேல் அரசர்களில் சிறந்தவனாக ஆகவேண்டியவன்! எனவே நீ நெடிது வாழ்வாயாக!..." என்று சொல்லிக் கேலியாக வாழ்த்துகிறாள்.

"என்னை நீ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாய். நீ நினைக்கிறபடி நான் ஒரு குற்றமும் செய்யவில்லை!" என்று அமைதியாகக் கூறுகிறான் தலைவன்.

"ஐயோ, பாவம்! ஒரு குற்றமும் செய்யவில்லை! கிழக்கே ஞாயிறு தோன்றி. அதன் வெய்யல் எரிக்கத் தொடங்கும் விடியற்காலத்தில், குப்பையை நீண்ட விளக்குமாறு கொண்டு கூட்டுவதால், மதுரையின் தெருக்களில் எப்படிக் கீறல்கள் காணப்படுமோ, அப்படி உன் உடலின் கண் கீறியிருப்பது, குதிரை தானா?" என்று அழுத்தந் திருத்தமாகத் தலைவி கேட்கிறாள். தலைவன் தோளில், பரத்தையின் கை விரலால் கீறப்பட்ட கீறல்களைச் சுட்டிக்காட்டி, அது குதிரையின் குளம்படியால் கீறப்பட்டதோ என்று கேலி தோன்றக் கேட்கிறாள். குதிரையின் கீறலாக இருந்தால், தெருவில் விளக்குமாற்றினால் ஏற்படும் கீறல்கள் போல் இருக்காது என்பது தலைவியின் எண்ணம். தலைவன் என்ன கூறுவது என்று தெரியாமல், வாய் திறவாமல், அசைவற்று அப்படியே நிற்கிறான்.

தலைவி அத்துடன் விடாமல் "அந்தக் குதிரை மிகக் கூர்மையான நகத்தைக் கொண்ட காலையுடையது போலும்! அது தன் காலால் கீறுதல் என்பது மிகக் கொடியதுதான்! அந்தக் குதிரைமேல் ஏறுகின்ற நீ, எந்தக் கெடுதியும் வராமல், நெடிது வாழ்வாயாக!" என்று மேலும் கேலி செய்கிறாள்.

"நீ என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. புரிந்துகொண்டிருந்தால் இப்படி ஐயப்படமாட்டாய்!" என்று தன்னை தூயவனாகக் காட்டிக்கொள்ள முயலுகிறான் தலைவன்.

"குதிரையின் உடலில் சேணம் இருப்பதுபோல, உன் உடம்பில் வண்ணங்களால் கோலங்கள் காணப்படுகின்றனவே, அவை மூங்கிலுழக்காலும், நாழியாலும் போடப்பட்டனவா அல்லது குதிரை கவ்வியதனால் ஆனவையா? கூறேன்!" என்று கேட்கிறாள்.

தலைவி தன்னை முற்றிலும் மடக்கிவிட்டாள் என்று கருதி, எதிர்பேசாமல் நிற்கிறான்.

"என்னவிருந்தாலும் அந்தக் குதிரை, தனக்கு ஒருபயனும் இல்லாத நிலையில், உன் உடலில் வடுப்படுத்தக் கூடாத இடங்களிளெல்லாம் வடுப் படுத்தியுள்ளது! சீ! அது மிகக் கெட்டதுபோலும்! அந்தக் குதிரை மிக்க வியப்புக்குரிய குதிரையாகத் தானிருக்கிறது! அத்தகைய குதிரையின்மேல் ஏறிய நீ தீங்கின்றி வாழ்வாயாக!..." என்று பரத்தையைக் குதிரையாக வைத்துக் கூறாமல் கூறித், தன் காதலனை ஆத்திரத்தோடு கேலி புரிகிறாள்.

தலைவன் என்ன செய்வான்! தன் குற்றத்தைத் தலைவி கண்டுபிடித்து விட்டாள் என்ற உணர்வோடு, நாணத்தால் தலைகுனிந்து நிற்கிறான்.

தலைவி மேலும் விடாமல், "இன்று நீ ஏறிய குதிரை மிகவும் நன்றாக இருக்கிறது! நீ குதிரை ஏறிவந்த தன்மையை இப்பொழுது நான் நன்றாக அறிகிறேன்! அது, அறநூல்களில் சொல்லியபடி, மணம் செய்துகொண்ட, மறுதாரமாகிய குதிரையா என்றால், அதுவுமில்லை! நண்பனாக இருப்பதற்குச் சிறிதும் பண்பற்ற, அயலானான பாணனால் ஏற்பாடு செய்யப்பட்டு, உன்னிடத்தில் காற்றுப்போல் விரைவாக வந்து சேர்ந்த பரத்தைக் குதிரை

‘காஞ்சி’

அறிஞர் அண்ணு நினைவு சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணுவின் படைப்புக்களுடன்
கழகத் தலைவர் கலைஞர்
கழகப் பொதுச்செயலாளர் நாவலர்
அமைச்சர் பெருமக்கள் அருந்தமிழ்ச் சான்ருேர்கள்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
டாக்டர் ந. சஞ்சீவி
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
டாக்டர் சாலை. இளந்திரையன்
குருவிக்கரம்பை சண்முகம்
தாமரைக்கண்ணன்
இரா. கண்ணிமை
கருமலைப் பழம்நீ
ஏ. கே. வில்வம்
மணிவேந்தன்
பல்லவன்
அரிமதி தென்னகன்
தி. நா. அறிவுஒளி
தமிழ்ச் சுரபி
ஆத்தூர் பன்னீர்ச்செல்வம்
எழிற்கோவன் மற்றும்

இளைய தலைமுறையின் இலட்சிய எழுத்தாளர்கள்
அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு
ஏப்ரல் திங்களில் வெளிவரவிருக்கிறது.

தேவைக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும். விலை ரூ. 3-00

மேலாளர், விவரங்கட்கு:
“காஞ்சி” அலுவலகம் : : காஞ்சிபுரம்-3.

“மலருக்கு” சேர்த்து சந்தா கட்டாத சந்தாதாரர்கள் ரூ. 3-00 அனுப்பி மலர் பெற்றுக்கொள்ளவும்

என்பதைத் தெளிவாக அறிந்துகொண்டேன்! அந்தக் குதிரையிடத்தில் நீ மீண்டும் சென்ருல், உன்னுடைய அழகிய உடலை முன் கூறியபடியெல்லாம் கெடுத்துவிடும்! ஆதலால் அக்குதிரையின் மேல் ஏருதே, உன்னை, நீ காத்துக் கொள்வாயாக!” என்று தலைவி எச்சரிக்கை செய்கிருள்.

தலைவன் மறுமொழி சொல்வதற்குள், “இல்லை, அப்பரத்தை குதிரையாக, நீ அரசரில் சிறந்தவனுக எண்ணி, எப்பொழுதும் அக்குதிரை ஏறவேண்டும் என்ற விருப்பமிருப்பின், இப்பக்கம் வராமல் அப்பக்கமே திரிவாயாக! அப்படியாளுல், இனி, இங்கே நீ காலந்தாழ்த்துக் கொண்டிருக்காமல், அக்குதிரை ஏறுதற்கு இப்பொழுதே போ!” என்று அதட்டிக் கூறுகிருள்.

தலைவன் தன் குற்றமுணர்ச்சி, அவள் விருப்பத்துக்கு இணங்கி நடக்க ஒருப்படுகிருன். தலைவி அவனை மன்னித்து எற்றுக்கொள்கிருள்.

ஃ ஃ ஃ

மருதக்கலியுள் 31-வது செய்யுளின் கருத்தே மேலே விளக்கமாகத் தீட்டிக்காட்டப்பட்டுள்ளது. **இளநாகனுரின்** அரிய படப்பிடிப்பு, இச் செய்யுளின் வாயிலாகச் சிறந்து விளங்குதலைக் காணலாம். பண்டைக்காலத் தமிழ் மக்களில் செல்வம் படைத்தோரில் சிலர், தன் காதல் மனையாளேயன்றி. காமக்கிழத்தி என்றும், பரத்தையர் என்றும் கூறுப்படும் வேறு சில பெண்டிரிடமும் இன்பநுகர்ச்சி கொண்டிருந்திருக்கக்கூடும். இது எங்குமுள்ள ஆணினத்தின் பொதுப்படையான பண்பு என்ருலும், கண்டிக்கப்படவேண்டிய பண்புதான். காதலன் பரத்தையர் வீட்டுக்குப் போவதாகப் பண்டைக் காலத் தமிழ்ப்புலவர்கள் பெரிதும் கற்பனை செய்து பாடல் இயற்றியதற்குக் காரணம், பெண்ணினத்தின் மாண்பை விளக்குவதற்கே யாகும் இப்படிப் பட்ட செய்யுட்களால், பெண்ணின் மாண்பு விளக்கப்பட்டு, ஆணின் கெட்ட பண்பு கண்டிக்கப் படுகிறது. பரத்தை வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் தலைவனை வெட்கப்படவைத்தும், பின் நல்வழிக்குத் திருப்பும் தலைவியின் மாண்பு இச் செய்யுளால் சிறக்க விளக்கப்படுவதைக் காணலாம். உலகில் நடைப்பெறக்கூடிய காதற்காட்சிகளிலே இதுவும் ஒன்று. உயர்ந்தனவற்றை விளக்கி, உயர்ந்தனவற்றை ஏற்றுக்கொள்ள, மக்களை வற்புறுத்துவதே, இத்தகைய செய்யுட்களின் உண்மை நோக்கமாகும்.

"அவள் எழுதிய கடிதம்"

"மனிதன் வேலை வேண்டும்; வேலை வேண்டும் என்று அலைந்து அலைந்து வேலையும் தேடிக் கொள்ளுகிறான்; வேலை கிடைத்த மறு வினாடியே ஓய்வு வேண்டும்; ஓய்வு வேண்டும் என்று ஓங்கார கூச்சலிடுகிறான். ஓய்வும் கிடைத்தப் பிறகு; யார் அடித்தாலும் பொருத்துக் கொள்ளலாம்; ஆனால் "போர்" அடித்தால் பொருத்துக் கொள்ள முடியாது என்று பிலாக்கணம் படிக்கிறான் என்னே உலகியல்பு?"

உலகியல்பா? எந்த ஒரு இயல்பைதான் உலகம் தன் இயல்பாக எடுத்துக் கொள்ளவில்லை? இதையும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்கு? உலகம் ஒரு பக்கம் இருக்கட்டும்; முதலில் உன் இயல்பு என்ன என்று தானே கேட்கிறீர்கள்? என் இயல்பும் அது தான்.

"எட்டு மணி நேரம் வேலை; எட்டு மணி நேரம் உல்லாசம் எட்டு மணி நேரம் உறக்கம்—" இருப்பது போதாது என்று வாரத்தில் ஒரு நாள்—முழு நாள் ஓய்வு தேவை என்று தொழிலாளர் நலத்தைப் பற்றி; "வேலையும் நேரமும்" என்ற தலைப்பில் மேடை ஏறி கொள்கை முழக்கமிடுகிறோம்; ஆனால் ஓய்வை பரிபூரணமாக அனுபவிக்க முடியவில்லையே-ஏன்? என்றுதான் எனக்கும் புரியவில்லை.

எப்பொழுதும் துரு துருவென்று இருக்கும் என் மூளை இன்று ஞாயிற்றுகிழமை ஓய்வு நாளாயிற்றே என்று முடங்கியா கிடக்கும்?

எதையாவது படிக்க வேண்டும் என்று மனம் விரும்புகிறது. ஆனால் எதைப் படிப்பது என்று தான் புரியவில்லை. படித்தால் தூக்கம் வரும். தூங்கவோ மனமில்லை. தூங்கினால் கனவு வரும். படிக்காமல் வேறு எதையாவது செய்தால்? வேலை முடியும். வேலை செய்தோம் என்ற மன நிறைவு ஏற்படும். "மனைவி இல்லாத வீடும்; மணம் இல்லாத மலரும் போல் வீடு ஏதோ ஒரு அந்தகாரத்தில் மூழ்கிக்கிடக்கிறது". புத்தகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இறைந்து கிடக்கிறது—ஏழைகள் பெற்றுவிட்ட அனாதை சிறுவர்களைப் போல் ஒவ்வொன்றாக பொருக்கி எடுத்து தூசி தட்டி அலமாரியில் அடுக்குகிறேன். ஒவ்வொரு புத்தகமாக தள்ளித்தள்ளி அடுக்குகிறேன். "மலர் விழி" என்றொரு புத்தகம் அதை எடுத்துப்பார்க்கிறேன்.

ஆம்! மலர் விழி அவள் தந்த அன்பளிப்பு! முதல் பக்கத்தைப் புரட்டுகிறேன்; "என் இதயம் கவர்ந்த அன்பின் காவலர்க்கு" என்று எழுதி; அதனடியில் அன்பிற்கேங்கும் பங்கஜம் என்றும் தன் பெயரையும் எழுதி இருக்கிறாள்.

அதன் பக்கங்களைப் புரட்டுகிறேன்; அதனுள்ளே இருந்து நிழற்படம் கீழே விழுகிறது. அதைக் கண்டு என் கண்கள் களிப்பெய்துகிறது.

அந்தப் போட்டோவில் "இளமையும் எழிலும்—அன்றலர்ந்த மலராய் — பூத்துக்குலுங்கும் பங்கஜம்-அழகின் வடிவம்" என்று எழுதி; அதனடியில் "கண்ணன்" என்று பெயரையும் பொறித்திருக்கிறேன். என் சிந்தனைப் பறவை சிறகடித்துப் பறக்கிறது.

"அத்தே... அத்தே..." என்று கூப்பிட்டுக் கொண்டே வாசலில் நிற்கிறேன். அத்தையை பார்ப்பதற்காகவா ஓடோடி வந்தேன்; அத்தை என்று பெயர்ச் சொல்லிக் கொண்டு அத்தையின் மகளை பங்கஜத்தைப் பார்ப்பதற்காக வல்லவா வந்துநிற்கிறேன்.

"அத்தையா?" என்று கேட்டுக் கொண்டே பெண்ணொருத்தி என் எதிரில் வந்து நிற்கிறாள். என்னைத் தூக்கி வாரிப் போட்டது. வீடு தெரியாமல் வந்து விட்டோமா என்று. அவளையும் ஒரு கண்ணில் பார்த்துக் கொண்டு வீட்டின் முகப்பையும் பார்த்தேன் அதே வீடுதான்.

"ஆமாம்; இது குழந்தை வேலர் வீடுதானே?"

"ஆமாம்" அவள் வாய் திறந்து சொல்லவில்லை; தலையசைத்தாள். "அத்தை இல்லையா?"

'அத்தையா?' என்றொரு கேள்வியும் எழுப்பிக் கொண்டு; "அம்மா; அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளேப் போனாள். அவளை பெண் என்பதைவிட ஒரு பூங்கொடி— நறுமணமிக்க பூங்கொடி என்று சொல்லுவதே சாலப் பொருத்தம்.

"அடேடே நீயா கண்ணா? வா வா; உள்ளே வாடா; என்னடி

நிலவழகன்

தெரியலே உனக்கு? நம்ம கண்ணன்'' என்று உள் பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டு யாருக்கோ அல்ல; அந்தப் பூங் கொடிக்குதான் சொல்லி இருக்க வேண்டும்.

"ஏன் அத்தே நம்ம பரங்கிக் காயா இது?'' என்று உள்ளே நுழைந்தேன்.

ஆமாண்டா அவளே தான் இவள். அவள்தானா மாறிப் போனாள்; நீயும் தான் மாறிபோய் இருக்கே. பட்டணத்திலே; அச்சா பிசிலே வேலைன்னு கேள்வி''.

"ஆமாம் அத்தே; அச்சாபிசிலே கதை எழுதுகிற வேலை'', என் கண் கள் சுழல் விளக்காயிற்று. அவளோ—கதவுக்கு துணையாய் நின்று கொண்டு; நான் பார்க்கும் போது வேறு எங்கோ பார்ப்பதும்; நான் பார்க்காத போது என்னைப் பார்ப்பதுமாய் இருந்தாள்.

"மாமா எங்கே அத்தே?''

"மாமா தாழனூர் போய் இருக் காரு; நாளையே திரும்புவேன்னு போனாரு; போய் ஒரு வாரமாவது இதுவரைக்கும் வரலே.''

''சரி அத்தே; நா வரேன்''

"காபி சாப்பிட்டு போ தம்பி'' என்றவள் தன் மகள் பக்கம் திரும்பி; ''அடியேய் பங்கஜம் காபி கலக்கண்டி...''

''சர்க்கரை இல்லேமா...''

"அத்தே; அத்தே உன் மகளுக்கு பேசவும் தெரியுதே இதென்ன அதிசயம்? பத்து அதிசயங்கள் தான் உலகத்தில் இருப்பதாக கேள்விப்பட்டேன். இப்பொழுது இல்லே தெரியுது பதினோராவது அதிசயமும் உலகத்தில் இருக் குன்னு,''

''நான் பத்தாவது வரைக்கும் படிச்சிருக்கேன்னு சொல்லம்மா.''

''அப்படியா அத்தே...? அப்போ இது பனிரெண்டாவது அதிசயம். அதிசயங்கள் மேல் அதிசயங்கள் ஏற்பட்டா உலகம் முழ்கிவிடும் என்பாங்கா; உலகம் முழ்கு வதற்கு முன்னே; என் தலையே வெடிச்சுடும் போலிருக்கு; நா வரேன் அத்தே'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து நடந்தேன்; கால்கள் நடந்ததே ஒழிய; மனம் நடக்கவில்லை. திரும்பவும் அத்தை சொல்லுவது போல்—கடைவிழி யில் பங்கஜத்தைப் பார்த்தபடியே "எனக்கு நிரம்ப வேலை இருக்கு அத்தே; நாளைக்கு வரேன்'' என்று சொல்லிக் கொண்டு நடந்தேன்.

கடல் உப்பும்; காட்டு களாக் காயும் இரண்டற கலந்து சுவை மிகு ஊறுக்காயாவது போல் கன்னி உள்ளத்தில் கட்டழகும் கவர்ச்சியும் குடியேறி கற்பனையில் தோய்த்து கனவாக்கி; அந்தக் கனவும் நினைவாக்கி; அந்த நினை வே—நிலையும் நினைப்பாக்கி நாள டைவில் அதுவே காதல் மலராக மருவி—அரும்பி மலர்ந்து நறு மணம் வீசியது! நடைமுறைதான் அதன் நறுமணம்!!

குலைக்கத் தெரியாத நாயும்; குருதிச் சுவை அறியாப்புலியும் இல்லை என்பது போல்—எந்தக் காதலர்களிடையேயும் காதல் கடிதங்கள் கைமாறாமல் இருந்த தில்லை.

கடிதங்கள் கைமாறிற்று— கண்ணனுக்கும் பங்கஜத்துக்கும்! பங்கஜம் தான் முதலில் கடிதம் எழுதினாள்.

இன்றொரு நாள் நீர் மொகந்து வர குளக்கரைக்குப் போகும் போது மாந்தோப்பில் சந்தித் தாள் பங்கஜம்.

"அத்தான்...''

"சொல் பங்கஜம்...''

"சொன்னா கோபிக்கமாட்டீங் களே''

"ஊக் ஊம்...'' தலையாட்டினான் கண்ணன்.

"நீங்கள்... நீங்கள்... ஒரு திரு டர்'' என்று சொல்லிவிட்டு தன் இரு கைகளாலும் கண்களை பொத்திக் கொண்டாள்.

"அடிப் பாவி; இவ்வளவு பெரிய பழியா என் மீது சுமத்தறே?''

வேறு என்னவாம் இதற்கு பெயர்? உங்களை ஒரு நாளாவது பார்க்கவில்லை என்றால் மனம் ஒரு நிலையில் இல்லை; தூக்கம் வரமாட் டேன் என்கிறது; உணவும் ஏற்ப தில்லை; தலையே சுக்குநூறாக வெடித்து விடும் போல் இருக் கிறது. என் இதயத்தை நீங்கள் களவாடி விட்டீர்கள்''

கண்ணன் கல கல வென்று சிரித்தப்படியே அவளைப்பிடித்து இழுத்து அணைத்தான்; அவளோ கொடிபோல் சாய்ந்தாள் அவன் மார்பில்.

"அப்பா... அப்படியா சேதி? நான் என்னவோ; ஏதோ என்று பயந்தே போனேன். இதற்கு பெயர் "திருடு'' என்றால் கரும்பி லிருந்து எறும்பு பெறுகிற இனிப் பும்; மலரிலிருந்து வண்டு பெறுகிற தேனும் திருடாகும் பங்கஜம். இதற்கு பெயர் திருடல்ல! உயிர் வாழ்வதற்கு உணவைத் தேடிக் கொள்ளுகிறது என்று பெயர். அதுபோல் தான் நானும் நீயும்''

"பெரிய தத்துவம் தான்''

"தவறான பேர்வழிகளுக்கு சரியானப் பாடம்.''

அத்தான்! அப்பா எனக்கு மணம் முடிக்கப் போகிறாராம். மாப் பிள்ளையும் பார்த்து விட்டாராம்; பெரிய பணக்காரராம்? பெரியப் பணக்காரர் என்பது போல் அவ் வளவு பெரிய வயதொன்றும் இல்லையாம்; நாற்பது; நாற்பத் தைந்துதான் இருக்குமாம். அவ ருக்கு என்னை பிடித்துவிட்டதாம். அப்பாவும் சம்மதம் சொல்லி விட் டாராம்.''

"உம் அப்படியா? ரொம்ப சந் தோஷம். செய்து கொள்ள வேண்டியது தானே?''

''இதுதான் உங்கள் முடிவா?''

''முடிவல்ல; நம் காதல் வாழ்க் கைக்கு ஒரு விடிவு பங்கஜம்; நம் காதலை கெடுக்க முயல்கின்ற பெற் றோர்கள் மன்னிக்க முடியாத குற்றவாளிகள். காதலைக் கொடுத் தது இயற்கை. இந்தக் காதல் யாருடைய கட்டுப்பாட்டிற்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டதல்ல;

தென்றலுக்கு தடை விதிப்பார் யாருண்டு? பங்கஜம் தயங்காதே! உன் ஆசைக் கனவு வீணாகாது. அது நினைவாகும்.''

''அத்தான்; காதலுக்கு இன்பம் தருவது பணமா? இளமைக்குன்றா வாலிபம்; இமை பொழுதும் மறந் தறியா கட்டழகும் கவர்ச்சியும் தானே? ஒரு பெண்ணுக்கு-காதல் வாழ்வுக்கு இன்பம் தருவது! ஒரு தந்தை உலகனுபவ மறியாத தன் மகளுக்கு திருமண விஷயத்தில் உதவ வேண்டியது அவசியம் மட்டுமல்ல; அவருடைய கடமை யும் கூட. ஆனால்;—அவர் பணத் தையும் படாடோபத்தையுமல்

லவா விரும்புகிறுர்." அவள் கண்களில் தாரைத் தாரையாய் கண்ணீர் மல்கி வழிந்தது.

"குடிநீர் கொண்டு போக வந்தாயா? இல்லே; கண்களில் குடியிருக்கும் நீரைக் கொட்டி விட்டுப் போக வந்தாயா?" என்று கேட்கத் தான் கண்ணன் மனம் விரும்பியது. ஆனுல் அப்படிக் கேட்பது அழகல்ல என்பதாலோ என்னவோ கேட்கவில்லே. அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"அத்தான்; எனக்குள்ள ஆசை ஒரு பக்கம் என்னே பெற்றெடுத்த பெற்றேர்களுக்கு துரோகம் செய்யக் கூடாது என்பது, மறு பக்கம் என் எதிர்கால வாழ்வை பாழாக்கிக் கொள்ளக் கூடாது என்பது. இதில் நான் எதை செய்வேன்? இரு கண்களும் மனிதனுக்கு வேண்டும். இதில் எதைப் போக்கிக் கொள்ள இசைவான் மனிதன்? அதுப் போல் தான் எனக்கு பெற்றேரும்; காதலனும். எண்ணுத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணுகிறது. பெண் ஜென்மம்—புண் ஜென்மம் என்பார்கள். அது என் வரைக்கும் உண்மை. என்னே நானே மாய்த்துக் கொள்ள துணிந்து விட்டேன்."

"அசடே! அறிவாளி போல் பேசாதே. இந்த உலகில் போராடி தான் வாழ வேண்டும். அதுதான் அறிவுக்கும் கற்றக் கல்விக்கும் அழகு. அறிஞர் பெருந்தகையே போராடித்தான் வாழ்ந்திருக்கிறுர். உன்னே போல் "அறிஞர்" அசடாக இருந்திருந்தால் என்றே தன் வாழ்வை மாய்த்துக் கொண்டிருப்பார். அவர்கள் அப்படி வாழவில்லே. என்னேக் கேட்டால்—இந்த மண்ணில் வாழாமல் தன்னேத் தானே மாய்த்துக் கொள்ளுவது தான் கோழைத்தனம் என்பேன்."

"நெஞ்சுக்கு நீதி வழங்காமல் வாழ்வது ஒரு வாழ்வா? அக்கிரமும் அநியாயமும் வாழும் இம் மண்ணில் வாழ்வது..."

"பங்கஜம்" உனக்காக அனுதாபப்படுகிறேன். இறைவன் இம் மண்ணில் பகுத்துணரும் ஆற்றல் வாய்ந்த உயிரினத்தை தோற்றுவிக்கப்பட்டது ஏன்? இன்ப வாழ்வு வாழ; துன்பச் சுமையை தாங்க; பின்னர் மாளவா? மனித இனத்துக்கு இவற்றை விட மேலானக் குறிக்கோள் இல்லேயா? உன்னேயே நீ மாய்த்துக் கொள்ள உனக்கு உரிமை உண்டா? நீ இந்த மண்ணில் படைக்கப்பட்டதற்குக் காரணம்—உன் விருப்பப்படியே நீயே இறந்து ஒழிவதற்காக இல்லே. நீ இந்த உலகிற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் நிரம்ப உண்டு. இதுவரை நீ இந்த உலகிற்கு என்ன நன்மைப் புரிந்திருக்கிறுய்? பரமண்டலத்தில் நீ இறைவன் முன் இந்த உலகில் சாதித்தவை எவை? உன்னுடைய இலட்சியங்கள் இதுவல்ல; நீ அடைய விரும்புவதை பெற முடியாதக் காரணத்தால் மாண்டு போக எண்ணுகிறுய். அது தவறு. இந்த உலகம் உனக்கு இன்பமளிப்பதற்கு தென்றலேயும்; மண்ணிலே பொன்னேயும்; விண்ணிலே விண்மீன்களேயும்; கண்ணிலே ஒளியையும் தந்திருக்கிறுன். அதற்கு நீ என்ன நன்றியை—கைமாறு செய்திருக்கிறுய்? பிறந்தவர்கள் அனேவரும் இறப்பது உண்மை என்பது எனக்கு தெரியும்; அதுவும் உனக்குத் தெரியும். நீயே ஒரு முறை எண்ணிப்பார்! போ; வீட்டுக்கு போ; நீர் மொகந்துக் கொண்டு போ!!! பங்கஜம் தன் சேலே தலேப்பில் முகத்தைத் துடைத்துக் கொண்டு; குடத்தைத்தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்தாள். தூசி நீக்கிய கண்ணுடி போல் இருந்தது அவள் முகம்.

"அடடே அவள் எழுதிய கடிதத்தைப் படிக்காமல் அவளேப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்துவிட்டேன்; அவள் எழுதிய கடிதம் இதுதான்;"

"அன்புக் கண்ணு! நலம்; நலமறிய அவா!! நலமோடு வாழ; இயற்கை அன்னேயை மனம்—மொழி—மெய்களால் வேண்டுகிறேன். உங்களேப் பிரியும் காலம் நெருங்கி விட்டது; நெருங்கி விட்தா? காலம் வந்து விட்டது. நான் இன்னெருவருக்கு மனேவியாகி விட்டேன்: ஆம்! அப்படித்தான் சொல்லுகிறுர்கள் என் கழுத்திலே தொங்கும் மாங்கல்ய சரடைப் பார்த்து. எனக்கு என்னவோ அது; உயிரை மாய்த்துக் கொள்ளும் சுருக்கு கயிராகத் தோன்றுகிறது. நீங்களும் அப்படி ஒரு முடிவுக்கு வரவேண்டாம். நீங்கள் வாழ வேண்டும்; வாழ வேண்டியவர். இனி நான் மாலேயிட்டவருக்கு மனேவியாகவும்; பெற்றேர்களுக்கு மகளாகவும்; ஊர் உலகத்துக்கு "பத்தினி" என்ற பேரோடும் வாழ வேண்டும். என்னே நீங்கள் எப்போதாவது பார்க்க விரும்பினுல் —ஒரு அண்ணன் ஒரு தங்கையை பார்க்க வருவது போல்—மனேவி மக்களோடு வந்துப் போகவும். இந்த முடிவுக்கு காரணம்—தாங்கள் போதித்த அறிவுரைகள் தான். இருக்கிறேன் திடமான நெஞ்சோடு" என்று எழுதி; அதன் அடியில் அன்புத் தங்கை பங்கஜம் என்று எழுதி இருந்தாள்...

"அப்...பா...அப்பா..." என் சிந்தனே கலேந்தது. என் மகள் ராசாத்தியும் மகன் இமயவரம்பனும் முன்னே ஓடிவர; பின்னே என் மனேவி ராசமும் வருகிறுர்கள். தலேத் தூக்கிப்பார்க்கிறேன் கண்கள் புன்னகைப் புரிந்தது. கையோ—" அவள் எழுதிய கடிதத்தை சுக்கு நூருகக் கிழிக்கிறது.

கலை மிளிரும் தமிழ் நாட்டின் நிலை வளர்க்கும் பரிசுச் சீட்டு!

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

மற்றும் ஏராளமான இதர பரிசுகள்

65-வது குலுக்கல் நாள்: 27-4-1974

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

அண்ணல் அம்பேத்கார்

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு உயிர்களும், மனிதர்களாகப் பிறப்பதில்லை. அப்படிப் பிறந்தாலும் அத்தனைப் பேர்களுமே மாண்புடையோராய் விளங்குவதில்லை, காலத்தின் வேகத்தால் அவர்களது கணக்கு முடிந்துவிடுகிறது, அதோடு அவர்கள் கதையும் முடிந்து விடுகிறது. ஆனால் ஒரு சிலர் மட்டும் என்றென்றும் மக்களின் மனதில் பசுமையான நினைவுகளோடு வணக்கத்திற்குரிய சான்றோராய் வாழ்ந்து வருகிறார்கள்.

உலக அரங்கிலே அத்தகையப் பெருமைக்குரிய பெருந்தகையாளர்களின் வரிசையிலே, சட்டமேதை டாக்டர் B. R. அம்பேத்கார் அவர்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

பாரத நாட்டின் நற்குடி மக்களில் ஒரு சாரார், சாதிமத பாகுபாடுகளின் காரணமாகத் தீண்டப்படாதவர்களாகவும், ஒதுக்கப்பட்டவர்களாகவும் நடத்தப்பட்டு வந்த பயங்கரக் கொடுமைகளையெல்லாம் எதிர்த்து மிகப் பெரிய சாத்வீகப் போராட்டங்களை நடத்தி கோடான கோடி தீண்டப்படாத மக்களின் கரங்களில் பூட்டப் பட்டிருந்த அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து அவர்களின் கண்ணீரைத் துடைத்து சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் போன்ற சமதர்மக் கொள்கைகளை நம் நாட்டில் சட்டத்தின் மூலம் உறுதிப் படுத்தியவர்கள் பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள்.

இத்தகையப் பெருமான் மராட்டிய மாநிலத்தில் இரத்தினகிரி மாவட்டத்தில் அம்பாவ்தே என்னும் சிற்றூரில் ஏழ்மை மிக நிறைந்த தீண்டப் படாத சமூகத்தில், 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள் இராம்ஜீ சேக்பால் என்பவருக்கும், தாயார் பீமாபாய் அம்மையாருக்கும் பதினான்காவது மகனாகத் தோன்றினார்.

அம்பேத்கார் அவர்கள் தம்மோடு படிக்கும் ஏனையச் சிறுவர்களைப் பார்க்கவும், பேசவும் அனுமதிக்கப் படவில்லை. தூரத்தில், ஓரத்தில், ஒதுக்குப் புறத்தில் புழுதித் தரையில் மட்டுமே உட்கார அனுமதிக்கப்பட்டார்கள். ஆசிரியர்களும் அருகில் வருவது இல்லை. தூரத்திலிருந்தே சொல்வனவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். கரும்பலகைக்கு அருகில் செல்வதும், அதைத் தொடுவதும் தீயச் செயலாகத் தடை செய்யப்பட்டன. இத்தகைய கொடுமைகளையெல்லாம், மிஞ்சும் வகையில் அம்பேத்கார் அவர்கள் பசி பட்டினியால் களைப்புற்றுத் துவண்டு துடித்த போதும், குடிப்பதற்கு ஒரு குவளைத் தண்ணீர் தருவதற்கும் மறுக்கப்பட்டது. பொதுவாக அம்பேத்கார் ஓர் அருவருப்பான பகுத்தறிவற்றப் பிராணியாக நடத்தப்பட்டார்.

சதாராவிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் கற்றுத் தேர்ந்து பம்பாயில் உள்ள எல்மினிஸ்டன் கல்லூரியில் B. A. பட்டம் பெற்றதுடன், உலகமெங்கிலும் ஓடி உயர் கல்விகளனைத்தும் கற்றார். அமெரிக்கா, இலண்டன், ஜெர்மனி போன்ற உயரிய உலகப் பல்கலைக் கழகங்களிலெல்லாம் அரசியல், பொருளாதாரம், சமூகம், தத்துவம், விஞ்ஞானம், மானிட இன வரலாறு, சட்டம் போன்ற உயர்கல்விகள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தும், பல அறிவியல் கட்டுரைகளை எழுதியும் எம்.ஏ. பி.எச்.டி, டி.எஸ், சி. டி. லிட். எல். எல். டி பார்—அட்—லா போன்ற அரியப் பட்டங்களையும் பெற்றார்.

உலகப் பேரறிஞர் பெருமக்களால் பாராட்டப் பெற்று, முதன் முதலாகக் கடல் கடந்துள்ள நாட்டிலிருந்து பல அரியப் பட்டங்களைத் தாங்கிக் கொண்டு அன்னை பூமிக்கு அவர் திரும்பிய போது, அம்பேத்கார் அவர்களை ஏனென்று கேட்பதற்குக் கூட நாதியற்று, இழி குலத்தவன் எனக் கருதி, வண்டிக்காரன் கூட இவரை ஏற்றிச் செல்ல மறுத்து விட்டார்கள். நடந்தே சென்றார், நடந்தக் களைப்பாலும், பசியாலும் சோர்வடைந்து தங்கும் விடுதியை நோக்கி சென்றார்." இழி சாதிக்காரனுக்கு இங்கே இடமில்லை போ!" என்ற ஏளனச் சொற்கள் அவரது இதயத்தைத் தோட்டாக்களாகத் துளைத்தன.

உலகிலேயே மிக உயர்ந்த கல்வி அறிவும் ஆற்றலும் நிரம்பப் பெற்ற நமக்கே இந்நிலையென்றால், படிப்பறிவில்லாமலும் அறியாமையாலும், அடிமை தனத்தாலும் மாக்களாக, தம் வேதனைகளைக் கூட வெளிப்படுத்த முடியாத ஊமைகளாக உழன்று கொண்டிருக்கும் கோடானக் கோடித் தீண்டப்படாத மக்களின் நிலை எவ்வளவு நரக வேதனை தரக்கூடியது என எண்ணி புழுவெனத் துடித்தார். இதன் விளைவுதான் "ஊமைகளின் தலைவன்" என்னும் செய்தித்தாள் உதயமாகியது.

அவரது உச்சக்கட்டப் போர்க்களமாக அமைந்தது 1931-ஆம் ஆண்டு இலண்டனில் நடைப்பெற்ற வட்டமேஜை மாநாடு ஆகும். பாரத சுதந்திரத்தை வழங்குவதற்கான ஆலோசனைக்காக ஆங்கில அரசினரால் கூட்டப்பட்ட அம்மாநாட்டில் காந்தியடிகள் பாரதப் பெருந் தலைவர்கள் பலருடனும், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அம்பேத்கார் அவர்களும் கலந்துக் கொண்டார்கள். மாநாட்டில், இந்திய நாட்டில் சாதியின் பெயரால் தம் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளனைத்தையும் மிக மிகக் கடுமையாக விளக்கி விவாதித்தார்கள். அம்மாநாட்டின் மூலம் நாட்டின் உண்மை நிலையை உலகிற்குப் படம் பிடித்துக் காட்டினார்கள். இவர்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமானால் தனித் தொகுதிமுறை வேண்டும், எனவும் வாதாடினார்கள். இவ்விதக் காரணங்களால் எவ்வித முடிவும் எடுகாமலே மாநாடு கலைந்தது.

அப்போதெல்லாம் காங்கிரஸ்காரர்கள் அம்பேத்காரை பலமாக எதிர்த்தார்கள். அவரை

‘ஆனந்த’ச் சித்திரை வா!

(ஆர்ப்பாக்கம் கவிப்பித்தன்)

பங்குனித்தாய் பெற்றெடுத்த
பாங்கான சித்திரையே!
பங்கமெல்லாம் இற்றழியப்
பணிபுரியும் முத்திரையே!

பழங்கருத்துப் பழுப்பிலைகள்
பொல, பொலவென் றுதிர்ந்திடவும்,
புதுமைபல துளிர்த்திடவும்
பீடுநடை போட்டே வா!

இளவேனில் காலத்தில்
இளமரக்கா, பொய்கைகளில்
எழில்பூத்துச் சிரித்திடவே
எதிர்வந்த சித்திரைவா!

நெஞ்சத்தில் நினைக்கின்ற
நல்லவைகள் நிறைவேற்றும்
வஞ்சமில்லாத் தருவாக
வந்துதித்த கற்பகம்வா!

‘ஆனந்தம்’ம் உன்பெரில்
அமைந்திருக்கும் காரணத்தால்
ஆனந்தம் தந்திடவே
அழைக்கின்றேன் சித்திரைவா!!

பலமாக எதிர்த்தக் காங்கிரஸ்காரர்களே அம்பேத்காருடைய பேராற்றலையும், அறிவுத் திறமையையும் உணர்ந்து, அவர்களிடத்திலுள்ள சட்ட அறிவு படைத்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும், டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியும், பஞ்சாபகேச அய்யரும் இருக்க, அவர்களையெல்லாம் விடுத்து, அம்பேத்காரை அழைத்து இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தீட்டித் தருமாறு வேண்டினர். இவர்களின் வேண்டுகோளை ஏற்று அரசியல் சட்டத்தையும் தீட்டித் தந்து, சட்டத்திலுள்ள குறைப்பாடுகளையும் எடுத்துச் சொன்னார்.

இப்படிப்பட்ட ஒரு பெரும் சிறப்பு வாய்ந்த மாணிக்கத்தை, தென்னகத்து மக்களுக்கு அறிமுகப் படுத்தி அவர்களின் அறிவுக் கண்களுக்கு ஒளி வீசச் செய்தப் பெருமை, பகுத்தறிவுச் சிங்கம் பெரியாரையும், தமிழகத்தின் தன்னிகரற்ற செல்வம் பேரறிஞர் அண்ணா அவர்களையும் சாரும்.

எண்ணற்ற எதிர்ப்புக்களிடையேயும், தம் வாழ்வையே போர்க்களமாக்கி, எண்ணிய எல்லாவற்றிலும் வெற்றியே பெற்ற அண்ணல் அம்பேத்கார் அவர்களை இயற்கை வென்றது. தமது 66-வது வயதில் 6—12—1956ல் வானுலகை அடைந்தார். அவர் மறைந்தாலும், அவரது புகழ் என்றும் மறையாது.

“என்றுவரை வெண்ணிலவில்
குளிர் இருக்குமோ!”
“என்றுவரை கடல்களிலே
அலை இருக்குமோ!”
“என்றுவரை கதிரவனில்
ஒளி இருக்குமோ!”
“அன்றுவரை அம்பேத்கார்
புகழ் உயர்ந்திருக்கும்!”

வண்ணமிகு படைப்புகள்
வண்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவே நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர் :: சென்னை-8

நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3, 86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.